# தமிழ்நாடு அறிவியல் இயக்கம்

# இயக்கம் அறிவோம் இணைவோம்

# கு.செந்தமிழ் செல்வன்

## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் என்பது என்ன?

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் என்பது அறிவியல் பிரச்சாரம் மற்றும் கல்விக்காக உறுதி கொண்டுள்ள ஒரு தன்னார்வ அமைப்பு ( பதிவு செய்யப்பட்ட சொசைடி). அறிவியல் சமூக மாற்றத்திற்கே போன்ற உன்னத தொலை நோக்குப் பார்வையுடன் செயலாற்றும் ஒரு மக்கள் இயக்கம். அமைப்பு விதிகளின்படி தமிழ்நாட்டில் கிராமம் முதல் மாநிலம் வரை கட்டுக் கோப்புடன் செயல்படும் ஒரே அமைப்பு..

மதராஸ் பல்கலைக் கழக ஆராச்சியாளர்களால் 1980 இல் உருவாக்கப்பட்டது. துவக்கத்தில் அறிவியல் கருத்துரைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டது. 1987 இல் “துளிர்” குழந்தைகளுக்கான அறிவியல் மாத இதழ் தமிழில் கொண்டுவரப்பட்ட பின்பு அறிவியல் கருத்துக்களை குழத்தைகளிடம் கொண்டு சென்றது.

1987-1991 வரை அறிவியல் ஆசிரியர்களை ஒன்றிணைத்து அறிவியிலை மகிழ்ச்சியாக கற்பிக்கும் வழிமுறைகளை ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்தது.இதனையே பின்பு படிப்பும் இனிக்கும், கற்பது கற்கண்டே போன்ற செயல்பாடுகளாக அரசு ஏற்று செயல்படுத்தியது.

அறிவொளி இயக்கம் 1991 இல் துவக்கிய போது தமிழ்நாடு அறிவியல் இயக்கத்திற்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அடித்தட்டு மக்களுடன் நெருங்கி பழகிடவும் அவர்களின் பிரச்சனைகளின் ஆழங்களைப் புரிந்து கொள்ளவும் வழிவகுத்தது. இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் கல்வி,அனைவருக்கும் ஆரோக்கியம், சுற்றுச் சூழல், நிலைத்தகு வளர்ச்சி போன்றவற்றிலும் தனது தனது தலையீடுகளைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் என்பது அனைவருக்குமான மதசார்பற்ற ஜனநாயக அமைப்பு..

## **அறிவியல் இயக்கத்தின் நோக்கங்கள் என்ன**?

- ஒரு கவுரமான வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், கல்வி, ஆரோக்கியம் போன்றவை அனைத்துவகை மக்களுக்கும் கிடைத்திட சமூக மாற்றத்தை உருவாக்குவதை ஓர் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் வெகுவாகக் குறைக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பை உருவாக்கும் வகையில் செயல்படுவது.
- சாதி, மதம், இனம், பாலினம் என்கிற அடிப்படையில் உருவாக்கப்படும் அனைத்துவகை பாராபட்சங்களையும் எதிர்பது, நீக்குவதற்கு துணை நிற்பது.
- அனைத்து வகை மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் ஜனநாயகத்தை உருவாக்குவது.
- எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியமான வளமான வாழ்க்கையை பாதிக்காத, இயற்கை வளங்களுக்கு தீங்குவிளைவிக்காத நிலைத்தகு வளர்ச்சியை மக்களின் பங்கேற்புடன் படைப்பது.

## **அறிவியல் இயக்கம், எவ்வாறு மற்ற தொண்டு நிறுவனங்களிலிருந்து வேறுபடுகிறது**?

மற்ற தொண்டு நிறுவனங்களிலிருந்து வேறுபட்டு, அறிவியல் இயக்கம் “வெளிநாட்டு நிதிகள் பெறுவதில்லை” என்பதில் உறுதியாக நிற்கிறது. மக்களின் மேன்மைக்காக செயலாற்றும் இயக்கம், அதன் செயல்பாட்டுக்கு நிதித் தேவைக்கும் மக்களிடமே கை ஏந்துகிறது.மக்கள் தங்களது பிரச்சனைகளுக்காக காரணங்களை புரிந்து கொண்டு, அதை மாற்றுவதற்கான அணியில் திரட்டப்பட தேவையான விழிப்புணர்வினை உருவாக்கும் கல்வி இயக்கம், அறிவியல் இயக்கம். மக்களின் பங்கேற்புடன், “அறிவியல் சமூக மாற்றத்திற்கே” என்ற லட்சியத்துடன் செயலாற்றும் மக்கள் இயக்கம், அறிவியல் இயக்கம்.

**அறிவியல் இயக்கத்தில் உறுப்பினராக ஏதேனும் தகுதி மற்றும் முன் நிபந்தனைகள் உள்ளனவா?**

- 18 வயது நிரம்பிய நபர்கள் யாவரும், அறிவியல் இயக்கத்தில் உறுப்பினராகலாம். ஆண்டு சந்தா ரூ.30 செலுத்தவெண்டும்..அறிவியல் இயக்கத்தின் நோக்கங்களை ஏற்றுக் கொண்டு அறிவியல் இயக்கத்தின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு செயல்படுபவராக இருக்க வேண்டும். மதசார்பற்ற ஜனநாயக கோட்பாடுகளை ஏற்றுக் கொள்பவராக இருக்க வேண்டும்.

**தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் ஈடுபடும் தொண்டர்களுக்கு என்ன பயன்?**

- அடிப்படையில் இந்த இயக்கத்தில் ஈடுபடுவது சேவைக்காக மட்டுமே .சமூக மாற்றத்திற்கான தங்களது பங்களிப்பாக இதனை செய்கிறார்கள். உன்னத நோக்கங்களுக்காக நல் இதயம் கொண்ட பலருடன் இணைந்து செயலாற்றும் போது இயற்கையாகவே இவை நல்ல தொடர்புகளாக மலர்கின்றன.

- இயல்பாக பலருடன் பழகும் பக்குவம், பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் திறன், நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் தைரியம் என பல அனுபவங்களை தொண்டர்கள் பெறுகின்றார்கள். எந்த ஒரு செயல்பாடுகளிலும் கற்றல், மகிழ்ச்சி மற்றும் பெருமிதம், இயக்கத்திற்கும் ஈடுபடும் தொண்டர்களுக்கும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

- சிந்தனைத் தெளிவும், திறமையில் மேம்பாடும் ஒவ்வொரு உறுப்பினரும் செயல்பாடுகள் வழியே பெற்றுக்கொண்டே உள்ளனர். இதனை அடித்தளமிட்டு வாழ்க்கையை முன்னேற்றவும் பல தொண்டர்களுக்கு வழி வகுத்துள்ளது. சமூக அங்கீகாரம், பல தொண்டர்களை குடும்பத்திலும் அவர்களின் பகுதியிலும் தலை நிமிரச் செய்துள்ளது.

**அறிவியல் இயக்கம், ஓர் உறுப்பினரிடம் உருவாக்க நினைக்கும் சிறந்த குணாம்சங்கள், அணுகுமுறைகள் உள்ளதா?**

அறிவியல் இயக்கத்தின் நோக்கங்கள் உயர்ந்தததாக உள்ளதால், அதனைச் சாதிக்க களம் இறங்கும் உறுப்பினர்களும் உறுதியுடன், தெளிவுடன் நோக்கத்துற்கேற்ற குணாம்சங்களுடன் சிறந்த தலைமைப் பண்புடன் செயலாற்றுவது அவசியமாகிறது .சில குணாம்சங்கள் புரிந்து கொள்வதற்காக கீழேத் தரப்படுகிறது. மேலும் பலவற்றை இணைக்கலாம். இயக்கத்தில் செயல்பட, செயல்பட இவைகள் கை கொள்ளப்படவும் மேம்படுவதும் அவசியம்.

1. சமூகத்தையும் சக மனிதர்களையும் நேசிப்பவரைகளாக வேண்டும்.
2. இயற்கையையும் பிற உயிரினங்களையும் நேசிப்பவர்களாகவும், பாதுகாப்பவர்களாகவும் மாற வேண்டும்.
3. அறிவியல் பார்வையுடன் அறிவியலார்ந்த வாழ்க்கையை வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
4. அவநம்பிக்கையிலிருந்து விடுப்பட்டு எதையும் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். சவால்களை ஏற்கும் உறுதி வேண்டும்.
5. புதியவைகளை கற்பதற்கான வேட்கையும், தேடலும் எப்போதும் உந்து சக்தியாக வேண்டும்.
6. நல்ல கனவு மற்றும் கற்பனையுடன் 'ஆக்கப் பூர்வமான சிந்தனை' துளிர்விட வேண்டும்.
7. மாற்றங்களை ஏற்றுக் கொண்டு மாற்றத்திற்கு தன்னை தயார்படுத்திக் கொண்டும் நிகழ்காலத்தில் வாழ வேண்டும்.
8. நீண்ட கால திட்டமும் அதனை நிறைவேற்ற நிகழ்கால செயல்களும் தேவை.
9. பல கேள்விகளுக்கு பின்பே ஏற்கும் விமர்சனப் பார்வையை வாழ்க்கை முறையாக்க வேண்டும்.
10. மூடநம்பிக்கைகளைக் களைத்து, முற்போக்கு சிந்தனைகளால் ஆட்பட வேண்டும்.
11. புத்தகங்கள் வாசிப்பதையும், விற்பதையும் கடமைகளாகச் செய்ய வேண்டும்.

12. சாதிய,மத ரீதியிலான வெறித்தனங்களுக்கு ஆட்படாமலிருப்பது. அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவராக இருப்பது அவசியம்.

## **அறிவியல் இயக்க உறுப்பினர்களின் கடமைகளும் உரிமைகளும் என்ன**?

ஒருவர் அறிவியல் இயக்கத்தில் உறுப்பினர் ஆவது அவரின் தன்னார்வத்தின் அடிப்படையிலேயே. ஆனால் அவர் இயக்கத்தில் இணைந்த பின்பு,அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு செயல்படுவது அவசியம்.

- ஆண்டு சந்தா செலுத்தி உறுப்பினர் ஆக வேண்டும். . பின்பு ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர் சந்தா செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். அல்லது ஆயுள் சந்தாவாகவும் செலுத்தலாம்.
- சந்தா செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டிற்கு உறுப்பினராக தொடருவார். ஆயுள் சந்தா செலுத்துபவர்கள் 10 ஆண்டு உறுப்பினர்களாக தொடர்வார்கள்.
- உறுப்பினர்கள் அனைவருக்கும் மாதம் தோறும் விஞ்ஞான சிறகு வீடு தேடி வரும்
- அவர்களது பகுதியில் உள்ள கிளையுடன் இணைக்கப்படுவார். உறுப்பினர்கள் கிளை கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வது, செயல்பாடுகளில் பங்கேற்பதும் மிக அவசியம்.
- புதிய கருத்துக்களை தாங்கள் உள்வாங்குவதுடன் தங்கள் குடும்பங்கள், நண்பர்களிடம் அக்கருத்துக்களை எடுத்துச் செல்ல வேண்டும். புதியவர்களை இணைப்பதையும் கடமையாகச் செய்ய வேண்டும். புத்தக் விற்பனையிலும், நிதி சேகரிப்பிற்கும் கிளைக்கு ஆதரவாக நிற்க வேண்டும்.
- அறிவியல் இயக்கத்தின் நோக்கங்களை முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

- ➢ தேர்வின் அடிப்படையில் மாவட்ட, மாநில மாநாடுகளில் கலந்து கொள்ளலாம்.
- ➢ கருத்தாளர்களாக வளர்ந்திட பல்வேறு பயிற்சிகளும் வாய்ப்புகளும் அளிக்கப்படும்.

## அறிவியல் இயக்கத்தின் செயல்முறைகள் என்ன?

### 1. அறிவியல் பிரச்சாரம்

அறிவியல் பிரச்சாரம்தான் அறிவியல் இயக்கத்தின் பிரதானப் பணி.

#### ❖ **பிரச்சாரத்தின் மூலம் சாதிப்பது**:

- ✓ மூடநம்பிக்கைகளை அகற்றவும் அறிவியல் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லலாம்
- ✓ அறிவியல் உண்மைகளைச் சொல்வது அல்லாமல் சமுதாயத்தில் அதனின் பாதிப்புகளை விளக்குவது.
- ✓ இயற்கை, சமுதாயம், விஞ்ஞானம் இம்மூன்றிற்குமான தொடர்புகளையும் , சரியான புரிதல்களையும் உருவாக்கலாம்
- ✓ அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை சாதாரண மக்களுக்கும் நெருக்கமாகக் கொண்டு செல்லலாம்
- ✓ விஞ்ஞானிகளையும் அறிஞர்களையும் வல்லுனர்களையும் மக்களுடன் தொடர்பு படுத்தலாம்.
- ✓ மக்களைத் தங்கள் தாழ்வு நிலைக்கானக் காரணங்களை புரிந்து கொள்ளவும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறகளைக் கண்டறியவும் உதவலாம்.

#### ❖ அறிவியல் பிரச்சாரத்தின் வடிவங்கள்

- ✓ **புத்தக வடிவில்**: துளிர், ஜந்தர் மந்தர் குழந்தைகளுக்கான மாத இதழ்கள் , பல்வேறு கருத்துக்களைத் தாங்கி வரும் அறிவியல்

வெளியீடுகளின் புத்தகங்கள் மூலம் அறிவியல் கருத்துக்கள் மாணவர்டையேயும் மக்களிடமும் கொண்டு செல்லப்படுகிறது. விழுது ,விஞ்ஞான சிறகு மற்றும் அறிவுத் தென்றல் இத்தகைய சாதனைக்கு துணை நிற்கின்றன.

- ✓ குழந்தைகள் அறிவியல் மாநாடு- ஆய்வுகள் செய்து கண்டறிந்து உணரவைப்பது
- ✓ வினாடி வினா நிகழ்வுகள்,
- ✓ துளிர் திறனறிதல் தேர்வு
- ✓ கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், தெருமுனை நாடகங்கள்
- ✓ கருத்தரங்குகள்,
- ✓ அறிவியல் முகாம்கள்,
- ✓ வான் நோக்கி முகாம்கள்
- ✓ விஞ்ஞானிகள் சந்திப்பு
- ✓ மந்திரமா? தந்திரமா?
- ✓ வாசிப்பு முகாம்கள்
- ✓ குரும் படங்கள், அறிவியல் பாடல்கள் , காணொளி நிகழ்ச்சிகள் போன்றவைகள் அறிவியல் பிரச்சாரக் கருவிகளாக பயன்படுகின்றன.

## 2. சுற்றுச் சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த பிரச்சனைகளில் தலையீடு.

சுற்றுச் சூழல் மற்றும் வளர்ச்சிப் பிரச்சனைகள் மனித குலத்தின் முன்னுள்ள ஒரு மையப் பிரச்சனைகளாகும், நடைமுறைப்படுத்தப்படும் ஒவ்வொரு வளர்ச்சி திட்டங்களும் இயற்கையையும், மக்களின் தற்கால, எதிர்கால வாழ்க்கையையும் பாதிக்கின்றனவா என ஆய்வு செய்து மாற்றுத் திட்டங்களை மக்கள் முன்னால் வைக்கிறது. உலகின் அனைத்து வளங்களும் கடல், வளிமண்டலம், காடுகள், நிலங்கள், நீர் நிலைகள் ஆபத்தில் உள்ளதையும், பருவ நிலையில் ஏற்பட்டு வரும் மிகவும் அச்சமூட்டக் கூடிய வேகமான மாறுதல் ஒட்டுமொத்தமான உயிர் சூழலையே

கடும் அழிவை நோக்கி தள்ளியுள்ளதையும் ஆய்வுகள் மூலம் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் கொண்டுவரும் மாற்றங்கள் சாதாரண மக்களுக்கான பயன்பாட்டிற்கு உதவுகின்றனவா, பொருளாதார, ஏற்றத் தாழ்வுகளை குறைக்கின்றனவா என்பதையும் ஆய்வு செய்து பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.

## 3. அரசுகள் கொண்டுவரும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களில் தலையீடு.

- மத்திய, மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல துணைநிற்பது சில திட்டங்களில் அறிவியல் இயக்கமும் பங்கேற்கிறது.
- அத்திட்டங்களில் உள்ள குறைபாடுகள், மற்றும் மாற்றுத் திட்டங்களை பல்வேறு ஆய்வுகளும் வல்லுனர்களின் கலந்தாய்வு செய்து அரசுக்கு தெரிவிக்கிறது. மக்களிடமும் பிரச்சாரம் செய்கிறது.

## 4. அனைவருக்குமான தரமான கல்விக்காக

- அனைவருக்கும் எழுத்தறிவிக்கும் அறிவொளி இயக்கத்தை மக்கள் இயக்கமாக நடத்தியதில் பெரும்பங்காற்றியது. அறிவொளி இயக்கத்தின் தேவை இன்றும் உள்ளது.
- பாடதிட்டங்களில் மாற்றங்கள் தேவை என்பதை வலியுறுத்தி வருகிறது. அரசுடன் சேர்ந்தும் தனித்தும் மாற்றுகளை உருவாக்கி வருகிறது .
- கற்பிக்கும் முறைகளில் மாற்றங்கள் காண வழிவகுத்துள்ளது
- சமச்சீர் கல்விக்கான இயக்கம்.
  அனைவருக்கும் தரமானகல்வி கிடைத்திட பல்வேறு தலையீடுகள்.
- அரசுப்பள்ளியைப் பாது காப்போம் பலப்படுத்துவோம் இயக்கம்.
  - ✓ ஆசிரியர் இணையத்தின் மூலம் ஆசிரியர்களை அனைவருக்குமான தரமான கல்விக்கு தயார் படுத்துவது.விழுது ஆசிரியர்களுக்கான மாத இதழ் மூலம்

ஆசிரியர்களை உற்சாக மூட்டவும் வழிகாட்டவும் செய்கிறது.

## 5. **சமம் – பெண் சமத்துவ கல்வி இயக்கம்**.

பெண்களை ஆற்றல் படுத்திடவும் ஆண் – பெண் சமத்துவத்தை வலுயுறுத்தவும் சமம் இயக்கச் செயல்பாடுகள் நடை பெறுகின்றன.

- வளரிளம் பெண்களுக்கு வகுப்புகள்
- பெண்களை ஆற்றல் படுத்த முகாம்கள்
- சகோதரி மையங்கள்
- பெண்கள் சுய உதவிக் குழுக்கள்
- சட்ட ஆலோசனை மையங்கள்
- ஆரோக்கிய இயக்கம்
- பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிரான இயக்கம்
- பெண்களே நடத்தும் “மந்திரமா? தந்திரமா”

## 6.**துளிர் இல்லங்கள்**

*துளிர் இல்லம் ஏன்?*

குழந்தைகள் என்றாலே அதிகம் கேள்வி கேட்பவர்கள்.பார்க்கின்ற ஒவ்வொன்றை பற்றியும் தெரிந்து கொள்ள அதிகம் விருப்பம் கொண்டவர்கள்.எப்பொழுதும் மகிழ்ச்சியையும், விளையாட்டையும் விரும்புகிறவர்கள்.
வளரும் குழந்தைகளுக்கு அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள வழி காட்டும் இடமே துளிர் இல்லம்.

தாங்கள் விரும்பியதை படிக்கவும் பேசவும்,எழுதவும் பகிரவும்,தங்களது திறமைகளை இனங்கண்டு வளர்த்து கொள்ளவும் துளிர் இல்லம் உதவுகிறது. துளிர் இல்லங்களை பள்ளிகளிலும்,கிராமங்களிலும் ஏற்படுத்தி நடத்தலாம்.

**துளிர் இல்லத்தின் நோக்கங்கள்**:

- ✓ துளிர் இதழை வாசித்தல்
- ✓ விஞ்ஞான ரீதியான சிந்தனையை வளர்த்தல்
- ✓ பள்ளிப்பாடம் தொடர்பான விளக்கம் பெறுதல் ,

- ✓ கைத்திறனும்,படைப்பாற்றல் செயல்திறனும் உருவாக்குதல்

.

.

**துளிர் இல்லத்தினை அமைக்கும் முறை:**

- துளிர் இல்லங்களானது 10 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பொருத்தமானது.
- ஒரு துளிர் இல்லத்தில் குறைந்தபட்சம் 10 முதல் அதிகபட்சம் 20 வரையிலான குழந்தைகளை உறுப்பினராக சேரலாம்.
- விஞ்ஞானி ஒருவரின் பெயரால் இயங்கலாம்.

- தலைவர்,செயலர்,பொருளர் போன்ற பொறுப்புகள் அமைக்கப்படவேண்டும். இணைப் பொறுப்புகளையும் அமைத்துக்கொள்ளலாம். குழந்தைகளிடையே தலைமைப் பண்புகளை வளர்க்க இது உதவிடும்.

- குழந்தைகளைக்கொண்டு அமைக்கப்படும் துளிர் இல்லங்களுக்கு வழிகாட்டி ஆசிரியர் நியமிப்பது மிகவும் அவசியமாகும்.
- இதற்கான வழிகாட்டி ஆசிரியர்களாக அறிவியல் இயக்க உறுப்பினர்களோ,அறிவியல் ஆர்வலர்களோ,கல்லூரி மாணவர்களோ செயல்படலாம்.
- ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் இரண்டு கூட்டங்கள் நடத்தப்படவேண்டும்.இந்தக் கூட்டமும் ஒரு மணிநேரமாவது நடத்தப்பட வேண்டும்.

**துளிர் இல்லங்களை பதிவு செய்யும் முறை:**

- துளிர் இல்லத்தினை மேற்சொன்ன விபரங்களைத் தெரிவித்து தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் ரூ 125 செலுத்தி முறைப்படி பதிவு செய்துகொள்ள வேண்டும். இது ஓராண்டு துளிர் சந்தாவும் உள்ளடக்கியது.
- அவ்வாறான பதிவு ஓராண்டிற்கு மட்டும் உட்பட்டது. அடுத்த ஆண்டு பதிவை புதுப்பித்துக்கொள்வது அவசியம்.
- பதிவு செய்ததன் அடிப்படையில் மாதம் ஒருமுறை துளிர் இதழானது துளிர் இல்ல முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.
- பதிவுச் சான்றிதழ் ஒன்றும் துளிர் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

**துளிர் இல்ல செயல்பாடுகள்**:

- துளிர் இதழ் வாசிக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும்.
- குழந்தைகளுக்கான புத்தகங்களை அறிமுகம் செய்தல்,
- புத்தகங்களை வாசித்து மகிழச்செய்தல்.
- குறைந்த மதிப்பிலான அல்லது மதிப்பில்லா பொருட்களைக் கொண்டு அறிவியல் விதிகளை பரிசோதனை செய்து புரிந்து கொள்ளல்
- குழந்தைகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புள்ள இடமாக மாற்றுதல் மற்றும் அதற்கான திட்டமிடல்,வழிகாட்டுதல்
- அளவைகள் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ள மெட்ரிக் மேளா நிகழ்ச்சிகளை நடத்துதல்
- கதைக் கூறல்,கதையின் முடிவைக் கூறல்,கதைகளை புதிதாக உருவாக்க வழிகாட்டல்
- விழிப்புணர்வு நாடகங்கள் அமைத்து நடித்தல்
- நல்ல குறும்படங்கள் திரையிடல் & விவாதம் செய்தல்
- விரும்பிய தலைப்பின்கீழ் கலந்துரையாடல் & விவாதம் நடத்துதல்(உதாரணம்; பெண்களின் இன்றைய நிலை,பெண்ணுரிமை,சுற்று சூழல்,நாட்டு நடப்புகள்)
- மரம்,செடி,கொடிகள்,பறவைகளை உற்று நோக்குதல் மற்றும் அறிதல்
- எளிய ஆய்வுகள் செய்தல்( எ.கா குளம் ஓர் ஆய்வு,மரம் ஓர் ஆய்வு,நீர்நிலைகள் ஆய்வு)
- கற்பனைத் திறன் மேம்பாட்டிற்கான ஒரிகாமி மற்றும் கற்பனையும் கைத்திறனும் செயல்பாடுகள் மேற்கொள்ளல்

- படம் வரைதல்,வண்ணம் தீட்டுதல்.கருத்துப்படங்கள் வரையத் தூண்டுதல்

- உயிரினங்கள் தோற்றம், பிரபஞ்சம் தோற்றம் விளக்கமளித்தல்.

- அறிவியல் கண்காட்சி நடத்துதல்.குழந்தைகளின் படைப்புகளை காட்சிப்படுத்துதல்

- அறிவியல் விஞ்ஞானிகள் அறிமுகம் செய்தல் மற்றும் அவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடல்

- அறிவியல் விழிப்புணர்வு மற்றும் குழந்தைப் பாடல்களை பாடுதல்

- பல்வேறு விளையாட்டுகளில் குழந்தைகளை பங்கேற்க செய்தல்.மண்சார்ந்த விளையட்டுகளுக்கு முக்கியத்துவம் தருதல்.

- கைத்தட்டல் போன்ற ஆர்வமூட்டும் செயல்பாடுகளை வழங்குதல்

- குழந்தைப் பெற்றோர்கள் சந்திப்புக் கூட்டம் நடத்தி குழந்தைகள் உள்வாங்கிய விசயங்களை அவர்களிடம் பகிர்தல், குழந்தைகளின் திறமைகளை பார்வைக்குட்படுத்துதல். குழந்தைகள் சார்பாக நின்று அவர்களின் தேவை, உரிமைக்காக வழிகாட்டி ஆசிரியர் பேசுதல்

- ஆண்பெண் சமத்துவ சார்ந்த நிகழ்வுகளை நடத்துதல்

- விஞ்ஞானிகளை, கல்வியாளர்களை சந்தித்தல்.

- ஆண்டுக்கொருமுறை குழந்தைகள் திருவிழா நடத்துதல்

- வானியல் நிகழ்ச்சிகள் நடத்துதல்.தொலை நோக்கி வாயிலாக கோள்களை கண்டு ரசித்தல்.நட்சத்திர அமைப்புகள் குறித்து அறிதல்.

- நுண்ணோக்கி வாயிலாக தாவர செல்,விலங்கு செல் போன்றவற்றினை கண்டு ரசித்தல்.

- முக்கிய தினங்களை கொண்டாடுதல்

( உலக சுற்று சூழல் தினம்,தேசிய அறிவியல் தினம்,ஹிரோசிமா நாகசாகி தினம்,உலகப் பெண்கள் தினம்,தேசிய குழந்தைகள் தினம்,உலகப் புத்தக

தினம்,சுதந்திர தினம்,குடியரசு தினம்,குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்,விஞ்ஞானிகள் பிறந்த தினம்,மக்கள் தலைவர்கள் பிறந்த தினம்)

- உள்ளூர்,வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளல்

- குழந்தைகளின் பிறந்த நாட்களைக் கொண்டாடுதல்

- பொம்மலாட்ட நிகழ்வுகளை குழந்தைகளே நடத்துதல்
- குழந்தை நூலகங்கள் அமைத்தல்,தங்கள் வீடுகளில் எளிய நூலகம் அமைக்க வழிகாட்டல்

- விழிப்புணர்வு,முக்கிய தினங்கள் குறித்த எளிய போஸ்டர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் தயாரித்தல்...

- சமூக விழிப்புணர்வு பேரணி நடத்துதல்

- குழந்தைகள் தங்களுக்கான எளிய கையெழுத்து பிரிதி துவங்கி நடத்துதல்

- துளிர் இதழை மையமாகக் கொண்டு வினாடி வினா நடத்துதல்.

- கணக்கும் இனிக்கும் நிகழ்வுகளை நடத்துதல்,விடுகதை புதிர் சொல்லல்/ உருவாக்குதல்

இதுபோன்று பல நிகழ்வுகளை குழந்தைகள் நலன் சார்ந்து திட்டமிட்டு கொண்டு செல்லலாம்.

துளிர் இல்லங்கள் பல குழந்தைகளின் கனவு இல்லாக உள்ளன.அவற்றை பட்டி தொட்டியெங்கும் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக,நல்வளர்ச்சிக்காக எடுத்து செல்வோம்.

## 7.**மண்ணுயிர் இயக்கம்**-

## கிராம செயல்பாட்டிற்கான ஒருங்கிணைந்த செயல்திட்டம்

**கற்போம் கற்பிப்போம்**:

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பள்ளிகளில் தான் தனது செயல்பாடுகளைத் துவக்கியது. 1991 இல் அறிவொளி இயக்கம்தான் கிராமங்களில் சாதாரண மக்களுடன் நேரிடையான தொடர்ப்புக்கு வழிவகுத்தது ,புதிய தளங்களை உருவாக்கிக் கொடுத்தது.அறிவொளியில் கிடைத்த அனுபவங்கள் மக்களிடம் செயலாற்ற புதிய வேகத்தையும் தெளிவையும் கொடுத்தது. தொடர்ந்து ஆரோக்கிய இயக்கம் நாம் இரண்டு மாவட்டங்களில் எடுத்துச் சென்றோம்.கடந்த 25 ஆண்டுகளில் பள்ளிக் கல்வியில் , சுற்றுச்சூழலில், பெண் சமத்துவத்தில்,அறிவியல் விழிப்புணர்வில் நமது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. நமது மாற்றுத் திட்டங்கள் பல அரசாலும் அங்கீகாரம் பெற்றுள்ளன.

நமது அனுபவங்கள் அடிப்படியில் கல்வி ,ஆரோக்கியம், விவசாயம்,கிராம நூலகம், சுற்றுச்சூழல் என அனைத்து செயல்பாடுகளையும் ஒரே கிராமத்தில் ஒருங்கிணைத்து ஒரு முன்மாதிரி கிராமத்தினை உருவாக்குவது அவசியம். நாம் பலமுறை இதைப்பற்றி பேசினாலும் செயலுக்கு வரவில்லை.மேலும் தாமதிக்காமல் இதற்கான திட்டத்தை உருவாக்கி செயல்படுதுவது அவசியம்.நமது அனுபவங்களை ஒன்று சேர்க்கவும் நாம் மேலும் கற்றுக்கொள்ளவும் இம்முயற்சி அவசியம்.

"**மண்ணுயிர் இயக்கம்**" – நாம் பிறந்த மண்ணின் மாண்புகளை புத்துயிர்ப்பு அளிக்கவும் விளைநிலங்களை உயிர்ப்பிக்கவும் இத்திட்டம் செயல்படும் என்பதால் மண்ணுயிர் இயக்கம் எனப் பெயரிடலாம்.

**மண்ணுயிர் இயக்கத்தின் நோக்கம்**:

- மக்களின் பங்கேற்புடன், அறிவியல் & தொழில் நுட்பத்தின் துணையோடு, சுயசார்பான ,தன்னிறைவு கிராமத்தை உருவாக்குவது.

- நீர்நிலைகள் மற்றும் பிற இயற்கை வளங்களை பாதுகாக்கவும்,விவசாயத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டவும் திட்டங்களை தயாரித்து செயல்படுத்துவது.
- தரமான கல்வி அனைவரும் பெறவும், நோயற்ற ஆரோக்கியமான வாழ்வினை உருவாக்கவும் பெண் சமத்துவதைப் படைக்கவும் துணை நிர்பது.
- கிராமத்திற்கேற்ற வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவது.
- அரசு திட்டங்கள் மக்களுக்கு கிடைக்க உதவுவது.

**அமைப்பு**:

1.**ஊராட்சி ஒருங்கிணைப்புக் குழு**:ஊராட்சி அளவில் திட்டமிடவும், செயல்படுத்தவும் கண்காணிக்கவும் ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைக்கலாம். ஊராட்சி ஒருங்கிணைப்பாளர் இக்குழுவினை வழி நடத்துவார்.கிராம ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயல்பாட்டு ஒருங்கிணைப்பாளர்கள், வார்டு உறுப்பினர்கள், ஆர்வமானவர்கள் சிலரையும் இணைக்கலாம்.ஊராட்சித்த்லைவரையே இக்க்ழுவிற்கு தலவராக ஏற்கலாம்.

2.கிராம ஒருங்கிணைப்புக்குழு:

கிராமம் அளவிலும் அத்தகைய குழு அமைக்கலாம்.தெரு அல்லது ஒரு பகுதிக்கு ஒரு ஒருங்கிணைப்பாளரையும் யோசிக்கலாம்.இவர்களும்

3. செயல்பாட்டுக்குழுக்கள்: மூன்றுவகைக் குழுக்கள் அமைக்கலாம்.

1. கல்வி& கலாச்சாரக்குழு

2.சம்ம்& ஆரோக்கியம் குழு

3. சுற்றுசூழல் & விவசாயம் குழு

ஒவ்வொரு குழுவிற்கும் செயல்பாடுகள் வரையரை செய்து நடைமுறைப்படுத்தலாம்.தேவையின் அடிப்படையில் கூடுதல் குழுக்கள் அமைக்கலாம்.

1.கல்வி& கலாச்சாரக் குழு:

இதனுடைய செயல்பாடாக ........

- பள்ளிகளில் கல்விக்குழுவில் இடம் பெறுவது.குழந்தைகளின் கல்வியின் தரத்தை உயர்த்த பள்ளியுடன் இணைந்தும் தனியாகவும் செய்வது.
- அரசுப்பள்ளிகளில் மாணவ்ர் சேர்க்கையை உயர்த்த இயக்கம் நட்த்துவது
- ஊராட்சியில் நூலகம், கிராமத்திற்கு ஒரு நடமாடும் நூலகம் நடத்துவது
- தகவல் மையம் ஊராட்சி அளவில் நடத்துவது
- கலைக்குழுக்கள்,இசைக்குழுக்கள், விளையாட்டுக்குழுக்கள் உருவாக்குவது
- மாணவர்கள், இளைஞர்களின் திறன் மேம்பாடு & தொழில் பயிற்சி
- துளிர் இல்லங்கள் அமைப்பு

2.சமம் & ஆரோக்கியம்:

- சகோதரி மையம், சட்ட ஆலோசனை மையம்
- சுய உதவிக் குழுக்கள்
- சுகாதாரத் தொண்டர்கள் பயிற்சி,முதல் உதவிப் பெட்டி பராமரிப்பு
- முக்கிய தகவல்கள் பதிவேடு பராமரிப்பு( பிறப்பு, இறப்பு,கர்பம்,திருமணம்)
- மருத்துவ முகாம்கள்,கிராம அறிவியல் திருவிழா
- வீட்டுத்தோட்டம்
- அனவரும் கழிப்பறையினை பயன்படுத்த இயக்கம்

3.சுற்றுச்சூழல் & விவசாயம்:

- நீர்நிலைகள் கண்காணிப்புக்குழு
- மழைநீர் சேகரிக்க ,மரங்கள் வளர்க்க இயக்கங்கள்
- அரசு திட்டங்கள் மக்களிடம் விழிப்புணர்வு.புதிய திட்டங்கள் உருவாக்க ஊராட்சி அமைப்பிற்கு உதவுவது.
- இயற்கை விவசாயத்திற்கு விழிப்புணர்வு.
- விவசாய மேம்பாட்டிற்கான திட்டம்
- கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குவது

**சர்வே**:
ஊராட்சி அளவில் சர்வே நடத்தி தற்போதய நிலையினை கண்டறிவது அவசியம்.அதன் அடிப்படையில் அக்கிராமங்களின் தேவைகளுக்கேற்ப செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

**நிதி ஆதாரம்**:
பொதுவாக உள்ளூர் மனித வளங்களைத் தன்னார்வமாகப் பயன்படுத்துவதால் அதிக செலவினங்கள் இல்லை. பிற செலவினங்களுக்கும் உள்ளூரிலே ஏற்கச்செய்யலாம் பெரும்பாலும் உள்ளூர் ஆதாரத்துடனே நட்த்துவது அவசியம். தொழிற்சங்கங்கள் தத்தெடுக்கச் செய்யலாம். எச்சரிக்கையுடன் நிறுவனங்கள் தத்தெடுக்கவும் செய்யலாம்.
அரசிடம் உதவிப்பெறவும் திட்டமிடலாம்.

**மாநில அளவில் பயிற்சி** : தேர்வு செய்யப்பட்ட கிராமங்களிலிருந்து செயல்பாட்டளர்கள் கண்டறியப்பட்டு மாநில அளவில் பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது.ஆர்வமான கிராமங்களுக்கு உடனடியாகவும் பயிற்சிகள் தரப்படும்.

**மண்ணுயிர் இயக்கம் செயல்படுத்த விரும்புவோருக்கு**:

தங்களது கிராமத்தில் மண்ணுயிர் இயக்கம் செயல்படுத்த விரும்புவோர்,தங்களது ஒன்றிய,மாவட்ட அறிவியல் இயக்க செயலாளரையோ அல்லது பொருப்பாளர்களைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

.

## அறிவியல் இயக்க உறுப்பினர்கள் மக்கள் போராட்டங்களில் பங்கேற்கலாமா?

அறிவியல் இயக்கம் ஒரு கல்வி இயக்கம் என்பதால் மக்களின் சிந்தனைகளை தூண்டுவதுவரை தனது எல்லையை வரையறுத்துக் கொள்கிறது. பிற ஜனநாயக அமைப்புகளில் இணைந்து மக்கள் போராட்டங்களில் உறுப்பினர்கள் பங்கேற்பதற்கு தடையேதும் இல்லை. அறிவியல் இயக்கத்தின் நிலைபாடுகளுக்கு உட்பட்டதாக அவைகள் இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

## மக்களோடு செயலாற்றுபவர்கள் கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் என்ன?

1. மகிழ்ச்சியோடு ஈடுபட வேண்டும். பெருமை கொள்ள வேண்டும்.
2. கற்றுக் கொள்ள தயாராக செல்ல வேண்டும். நாம் கற்றுக் கொள்ள செல்கிறோம் என்ற உணர்வோடு செயலாற்ற வேண்டும்.
3. மக்கள் முன்னால் கேலி, கிண்டல் தவிர்க்க வேண்டும்.
4. எளிய உடை அலங்காரம் போதும். இனிமையாக பேச வேண்டும்.
5. மக்களுக்கு பரிச்சையமான வார்த்தைகளில் பேச வேண்டும்.
6. எந்த காரணம் கொண்டும் மக்களை குற்றவாளியாக ஆக்கக் கூடாது.
7. அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புத் தருவது திறமைகளை பாராட்டக் கற்றுக் கொள்வது.
8. விதண்டாவாதத்தில் ஈடுபடக் கூடாது. குறிப்பாக நாம் சொல்வது தான் சரி என்று விவாதித்துக் கொண்டிருக்க கூடாது.
9. மக்களை உறவு முறையோடு அழைப்பது அவர்களோடு நெருங்கி செல்ல வாய்பளிக்கும்.
10. மக்களை அடைய மிக சிறந்த வழி குழந்தைகள் தான். குழந்தைகளோடு பழகுங்கள்.
11. நாம் ஒரு நோக்கத்திற்கு சென்றாலும் அவர்களின் பிறப் பிரச்சனைகளை குறிப்பிட்டால் பொறுமையாக கேட்க வேண்டும் வாய்ப்பு இருப்பின் வழிக்காட்டவோ தலையிடவோ செய்யலாம்.

12. நாம் செய்ய வேண்டிய வேலைகளில் நமக்கு தெளிவு வேண்டும்.
13. மக்கள் இயக்கத்தில் நம்பிக்கை வேண்டும். எதையும் மாற்ற முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.
14. கூச்சமில்லாமல் பேச பழக கற்றுக் கொள்ள வேண்டும்.
15. நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும் அந்தப் பகுதி பழக்கத்திற்கு உட்பட வேண்டும்.
16. எந்தப் பகுதிக்கு செல்கிறோமோ அந்தப் பகுதியைப் பற்றிய விவரங்களை தெரிந்திருப்பது நல்லது.
17. நமது அனுபவங்களை பதிவு செய்ய வேண்டும்.
18. பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ள ஆர்வம் கொள்ள வேண்டும்.
19. “ பதில் சொல்ல” என்ற வட்டத்தில் நாம் நின்று விடக் கூடாது. நமது பரந்த செயல்பாட்டால் எதிர்ப் பார்ப்புகளையும் தாண்டி எல்லைகள் விரிவடைய வேண்டும்.

## அறிவியல் இயக்கத்தின் முக்கிய அமைப்பு விதிகள் என்ன?

- ஆண்டு சந்தா/ ஆயுள் சந்தா செலுத்தி ஒருவர் உறுப்பினர் ஆக வேண்டும்.
- ஒரே பகுதியினைச் சார்ந்த குறைந்தது 20 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு கிளை உருவாக்கப்படும். கிளை மாநாடுகளில் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் பிற நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுவர். இவர்கள் இரண்டு ஆண்டு காலம் பொறுப்பு வகிப்பர்.
- மாவட்ட அளவில் மாவட்டக்குழு உருவாக்கப்படும்.கிளைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாவட்ட மாநாட்டில் செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவர். செயற்குழு கூடி, தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் பிற நிர்வாகிகளைத் தேர்வு செய்யும். இவர்கள் இரண்டு ஆண்டு காலம் பொறுப்பு வகிப்பர்.
- மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநில மாநாட்டில் பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவர். பொதுக்குழு

கூடி செயற்குழுவினையும், செயற்குழு கூடி நிர்வாக்க் குழுவினையும் தேர்வு செய்யும். நிர்வாக்க் குழு தன்க்குள் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் பிற நிர்வாகிகள் தேர்வு செய்து கொள்ளும். இவர்கள் இரண்டு ஆண்டு காலம் பொறுப்பு வகிப்பர்.

- கிளை , மாவட்ட, மாநில மாநாடுகளில் செயலாளர் அறிக்கையும் பொருளாளரின் வரவு செலவு அறிக்கையும் முறையாக வைக்கப்பட வேண்டும்.கிளை அறிக்கை மாவட்ட்த்திற்கும் மாவட்ட அறிக்கை மாநிலத்திற்கும் சமர்பிக்கப்பட வேண்டும்.

## ஓர் அறிவியல் இயக்க கிளை செயத்தக்க செயல்பாடுகள் என்ன?

ஒரு கிளை செயலாற்றும் பகுதியிலுள்ள மக்களுடன் நெருங்கிப் பழகுவதும், அவர்களுடன் உரையாடுவதும், அப்பகுதி மக்களின் வாழ்நிலைகளையும், பிரச்சனைகளை புரிந்து கொள்வதும் அவசியம். அந்தப் புரிதலின் அடிப்படையில் நமது செயல்பாடுகள் அமைய வேண்டும். “கற்போம், கற்பிப்போம்”, அனுபவத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

1. அரசு நலத்திட்டங்களை மக்களிடம் பிரபலப்படுத்த:
   - கர்ப்பிணி பெண்களுக்கு குழந்தைகளுக்கு அரசு மருத்துவமனைகள் அளித்திடும் சேவைகளை மக்களிடம் பிரச்சாரம் செய்வது.
   - கர்பிணி பெண்களை பதிவு செய்து கொள்ள தூண்டுவது, இரும்பு சத்து மாத்திரைகள் முறையாக கிடைப்பதையும், உண்பதையும் தடுப்பூசிகள் போட்டுக் கொள்வதையும் உறுதிப் படுத்துவது.

     குழந்தைகள் எடை எடுத்துக் கொள்ளவும், தடுப்பூசி பெறவும், தகுந்த மருத்துவம் பெறவும் தாய்மார்களுக்கும் சுகாதாரத் துறைக்கும் பாலமாக நிற்பது.

மேற்கண்ட சேவைகள் கிடைக்காத போது, அரசு அதிகாரிகளை சந்தித்து சேவைகள் தொடர்ந்து கிடைத்திட உதவுவது.

- விவசாயிக்கான உதவிகளை, கல்வி தொடர்பான உதவிகளை நாமும் அறிந்து மக்களிடம் கொண்டு செல்லலாம்.
- இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், கடன் உதவிகளையும் விளக்கிடலாம்.
- சுய உதவிக் குழுக்களுக்கான உதவியையும் கிடைத்திட துணை. அரசு திட்டங்களை நாம் கொண்டு செல்லும் போது நாமும் ஒரு முகவர்களாக மாறிவிடாமல் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். அரசுத்திட்டங்களில் உள்ள குறைபாடுகளை நலம் அறியவும், அதற்கான மாற்றுதிட்டங்களை உருவாக்கவும் இந்த அனுபவங்கள் உதவிடும்.

  இது தொடர்பான பிரசுரங்கள் வெளியிடலாம், குழுவாகச் சென்று வீடுகளில் பிரச்சாரம் செய்யலாம், கூட்டங்கள் நடத்தலாம்.

2. மக்கள் காலம் காலமாக பின்பற்றி வரும் பழக்க வழக்கங்களை அறிவியலின் வெளிச்சத்தில் புரியவைக்கலாம். மூடநம்பிக்கைகளுக்கு எதிராக வலுவான பிரச்சாரங்களை கொண்டு செல்லலாம்.
   - மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகள் நடத்தலாம்.
   - காலரா, டெங்கு காய்சல்களால் பாதிக்கப்படும் பகுதிகளில் பிரச்சாரம், நோய்களுக்கான காரணங்களையும், அதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் விளக்கி பிரசுரங்கள் வெளியிடலாம். வீடுவீடாகச் சென்று மக்களிடம் உரையாடலாம்.
   - சூரிய கிரணம், சந்திர கிரணம் வானில் நிகழும் போது அதனைப் பற்றிய மூடநம்பிக்கைகளை விளக்கியும், அற்புத நிகழ்ச்சிகளை காணவும் தயார் படுத்தலாம்.
   - ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணைப் பற்றிய பார்வையும் அதனைத் தக்கவைக்க ஏராளமான சடங்குகளும், சம்பிரதாயங்களும் இன்று நடைபெற்று வருகின்றன.

பெண்களைப் பற்றிய புதிய பார்வையினை உருவாக்க கலைநிகழ்ச்சிகள், நடத்தலாம். சுய உதவிக்குழுக்களிலும் இதற்கான விவாதங்களைத் துவக்கலாம்.

பல காலமாக நம்பி வருபவைகளை கேள்வி கேட்க வைப்பது உணர்வுகளோடு தொடர்புடையது. எனவே, பக்குவமாக செயல் படுத்துவது அவசியம். அவர்காளின் கடவுள் நம்பிக்கைகளையும் இதே பக்குவத்துடனே கையாள வேண்டும்.

3. பள்ளிகளில் நடவடிக்கைகள்:

அறிவியல் இயக்கம் கடந்த 30 ஆண்டுகளில் கல்வியில் ஏராளமான செயல்பாடுகள் செய்துள்ளது. சமூக அங்கீகாரம் பெற்றுள்ளது. எந்த பள்ளிகளிலும் நாம் செயலாற்ற கதவுகள் திறந்தே இருக்கின்றன. ஆசிரியர்களுடனான நல்வுறவு இதற்கு வலு சேர்க்கும்.

- குழந்தைகளுக்கான ஒரு நாள் “அறிவியல் முகாம்கள்”, “கணிதத் திருவிழாக்கள்”, வினாடி-வினா நிகழ்ச்சிகள் நடத்தலாம்.
- அறிவியல் பாடல்கள், நாடகங்களுக்கு பயிற்சி அளித்த பள்ளிகளிலும், கிராமங்களில் நடத்த தூண்டலாம்.
- “கல்விச் சுற்றுலா” ஏற்பாடு செய்யலாம்.
- இலவச மாலை நேர வகுப்புக்கள் நடத்தலாம்.
- கண், பல், தோல் பரிசோதனைகளுக்கும், பிற மருத்துவ முகாம்களுக்கும் பிற அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்யலாம்.
- தொலை நோக்கி முகாம்கள் நடத்தலாம்.
- நல்ல குறும்படங்கள் பார்க்க ஏற்பாடு செய்யலாம்.
- முதலுதவிப் பற்றி முகாம் நடத்தலாம்
- துளிர் இல்லங்களை உருவாக்கி தொடர் நடவடிக்கைகள் மேற் கொள்ளலாம்.
- இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்க்க உதவலாம்.
- ஒவ்வொரு பள்ளியிலும் செயல்படும் நூலகத்தினை உருவாக்க துணை நிற்க வேண்டும்.

பெற்றோர், ஆசிரியர் கழகத்திலும், கிராமக் கல்விக் குழுக்களிலும் அறிவியல் இயக்க உறுப்பினர்கள் இடம் பெறுவது உதவியாக இருக்கும். பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கேற்பது, ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பது போன்ற நடவடிக்கைகள் பள்ளிகளுடனான தொடர்பை பலப்படுத்தும்.

4. விவசாயிகளுடன்:
   - விவசாயத்தில் நிகழ்ந்து வரும் வளர்ச்சிகள், மாற்றங்கள் குறித்து உரையாட தொடர்ந்த கூட்டங்கள் நடத்தலாம்.
   - அறிமுகப் படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் மாற்று முறைகளையும் அறிந்திட தொடர்புடைய துறையுடன் இணைந்து முகாம்கள் நடத்தலாம்.
   - விவசாயிகள் இணைந்து, கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கிட உதவலாம்.
   - வங்கிகளிலும் விவசாயிகளுக்கு கிடைக்கும் கடன் வசதிகளை அவர்களிடம் விளக்கலாம். அவைகள் கிடைக்கப் பெறவும் துணை நிற்கலாம்.
   - மண் புழு உரம் தயாரிக்கவும், பிற இயற்கைசார் விவசாயம் மேற்கொள்ளவும் தேவையான பயிற்சிகள் நடத்தலாம், தொடர்புகளை உருவாக்கலாம்.
   - அப்பகுதியிலுள்ள, ஆறுகள், ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகள் எவ்வாறு அழிக்கப்பட்டு வந்துள்ளன என்பதை அறிய விவசாயிகளுடன் இணைந்து சர்வே நடத்தலாம். பாசனக் கிணறுகளிள் நீர் மட்டங்கள் குறைந்து வருவதற்கான காரணங்களை அவர்களுடன் இணைந்து விவாதிக்கலாம், மழை நீர் சேகரிப்பிற்கும் திட்டமிடலாம்.
   - கிடைக்கக் கூடிய நீரின் அளவிற் கேற்க செய்யத்தக்க பயிர்களை, பயிர் முறைகளை அவர்களுக்கு அறிமுகப் படுத்த முகாம்கள் நடத்தலாம்.
   - ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தின் சிறப்பாக செயல்படுத்தும் பண்ணைகளுக்கு விவசாயிகளை சுற்றுலா அழைத்துச் செய்யலாம்.
   - விவசாயிகள் எழுத்தறிவு பெற அறிவொளி மையங்கள் நடத்தலாம். அவர்கள் தொடர்ந்து வாசிப்பதற்கும் உதவலாம்.
   -

5. பெண்களுக்கு:
   - ”சமம் இயக்கம்” வழிகாட்டும் நடவடிக்கைகள் செய்யலாம்.
   - வளர் இனம் பெண்களுக்கான முகாம் திட்டமிடலாம்.
   - “இரத்தம் பரிசோதனை முகாம்” நடத்தி ரத்த சோகையை பற்றி விளக்கி வழிகாட்டலாம்.
   - மூடநம்பிக்கைகள் குறித்து விவாதம் துவக்கலாம்.
   - மாதவிடாய், வெள்ளைபடுதல், மார்பக புற்று நோய் போன்றவைகள் குறித்து விழிப் புணர்வு அளிக்கலாம்.
   - சினிமா, தொலைகாட்சிகள் பற்றி விமர்சினங்களையும், விவாதங்களையும் துவக்கலாம்.
   - பெண் அடிமையான வரலாறுகளைக் கூறி ஆண், பெண் சமத்துவத்திற்கு பெண்களை தயார் படுத்தலாம்.
   - பெண்கள் பொருளாதார முன்னேற்றம் பெற வருமானத்திற்கும் விழிகாட்டலாம்.
   - நாம் வழிநடத்தும் மகளிர் குழுக்களிலிலோ, பிற மகளிர் குழுக்களிலோ தொடர்ந்து அறிவியல், கருத்துக்களை கொண்டு செல்லலாம். அறிவுத் தென்றல், துளிர், விஞ்ஞான சிறகு, அறிவியல் வெளியீடுகள் இதற்கு பயன்படுத்தலாம்.
   - பெண்களுக்கான தனியான நூலகத்திற்கும் திட்டமிடலாம்.
6. இளைஞர்களுக்கு:

   இளைஞர்களை அறிவியல் இயக்கத்தில் ஈடுபட வைப்பது மிகமிக அவசியம்.
   - நாம் மேற்கொள்ளும் கலைநிகழ்ச்சிகள், முகாம்கள், ஆய்வுகள் போன்ற அனைத்திலும் இளைஞர்களை ஈடுபடுத்தலாம்.
   - “வாசிப்பு இயக்கத்தை” இவர்கள் மத்தியில் கொண்டு செல்லலாம். மாதம் தோறும் சிறந்த புத்தகங்கள் அறிமுகம், விமரிசனம், தொடர்ந்து புத்தகங்கள் வாசிக்க ஏற்பாடு என முயற்டிகள் தொடர வேண்டும். நூலகங்களை செயல்பட வைப்பது. புத்தக சேகரிப்பு இயக்கம் என பல வடிவங்களில் செயல்படுத்தலாம்.
   - அவர்களுக்கு ஆர்வமான கலைத்திறனை வளர்க்கவும், பிற திறமைகளை வளர்க்கவும் பயிற்சிகள் ஏற்படுத்தலாம்.

- மக்களையும், தேசத்தையும் நேசிக்கவும், சேவை செய்வதை வாழ்க்கை முறையாக்கவும் தொடர் முயற்சிகளை செய்யலாம்.
- புகை மற்றும் மது பழக்கத்திலுருந்து இவர்களை வென்றெடுக்க விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்தலாம்.
- புதிய புதிய யுக்திகளைக் கையாண்டு, அவர்களை ஆர்வமுடன் பங்கேற்க வைக்கலாம்.

7. பஞ்சாயத்து அமைப்புடன்:
   - பஞ்சாயத்து அமைப்புகள் தங்களது கிராமங்களுக்கான வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க திறம்பெற அறிவியல் இயக்கம் துணை நிற்க வேண்டும்.
   - உறுப்பினர்களுக்கான பல்வேறு திட்டங்கள் பற்றி பயிற்சி அளிக்கலாம்.
   - பல்வேறு சர்வேகள் மேற்கொண்டு, பஞ்சாயத்துக்கள் திட்டமிட உதவலாம்.
   - பஞ்சாயத்தின் துணையோடு
     - அனைத்து வீடுகளிலும் கழிப்பறை கட்டவும்.
     - பிளாஸ்டிக் இல்லா கிராமமாக்கவும்.
     - குழந்தை தொழிலாளர் இல்லா கிராமமாக்கவும்.
     - வீடு தோறும் மரம் வளர்க்கவும், வீட்டுத் தோட்டம் உருவாக்கவும்.

என பல ஆக்கம் பூர்வமான செயல்களை நடைமுறைப்படுத்தலாம்.

## அறிவியல் இயக்கச் செயல்பாடுகளுக்கு என்ன வழிமுறைகளைப் பின்பற்றலாம்?

அறிவியல் இயக்கம் தனது 32 ஆண்டு செயல்பாட்டில் ஏராளமான வழிமுறைகளை உருவாக்கி பின்பற்றுகிறது.

கீழ்கண்ட வழிமுறைகளை கருவிகளாகக் கொண்டு செயல் படுத்தலாம்:

1. அறிவியல் பாடல்கள், நாடகங்கள்
2. துளிர், விஞ்ஞான சிறகு, அறிவுத் தென்றல், விழுது, ஜந்தர் மந்தர் மாத இதழ்கள் – வாசிப்பு.
3. அறிவியல் வெளியீடுகள் – வாசிப்பு
4. புத்தகங்கள்: வாசிப்பு, அறிமுகம், விமர்சனம், விவாதம்.

5. கருத்தரங்குகள்.
6. விவாத அரங்கங்கள்.
7. தெருமுனைக் கூட்டங்கள்.
8. வீடு தோறும் சென்று பிரச்சாரம்.
9. பிரசுரங்கள்.
10. மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகள்.
11. ஊர்வலம்
12. ஆய்வுகள்
13. வினாடி-வினா நிகழ்ச்சிகள்
14. அறிவியல் முகாம்கள்
15. கணிதத் திருவிழா
16. கணக்கெடுப்பு
17. ஸ்லைடு காட்சிகள்
18. சுவரொட்டி
19. கண்காட்சிகள்
20. CD/Video காட்சிகள்
21. குறும்படங்கள்
22. கல்விச் சுற்றுலா
23. உரையாடல்கள்
24. தொலை நோக்கி முகாம்கள்
25. போட்டிகள்/தேர்வுகள்
26. பத்திரிக்கை/தொலைகாட்சி, ஊடகங்களில் செய்தி/பேட்டி.
27. கோஷங்கள்
28. சுவரெழுத்துக்கள்
29. துணி பேனர்கள்.
30. கையெழுத்து பிரதி இதழ்கள்.
31. கருத்துத்தாள்கள்
32. போட்டோ கண்காட்சிகள்
33. ஓவியங்கள்
34. கார்டூன்கள்
35. தகவல் பலகைகள்
36. விஞ்ஞானிகள் சந்திப்பு
37. ஓட்டங்கள்
38. மனிதச் சங்கலி

39. சைகிள் ஊர்வலம்
40. நடை பயணம்
41. பயிற்சிகள்
42. கருத்துரைகள்
43. பரிசோதனைகள்

**அறிவியல் இயக்க கிளை செயல்பாட்டிற்கான செலவினங்களுக்கு என்ன செய்யலாம்**?

பல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நிதி ஆதாரம் அவசியம். அறிவியல் இயக்கம் ஒரு மக்கள் இயக்கம். மக்களுக்காக செயலாற்றுவதால் மக்களிடமே நிதி உதவிகளையும் எதிர் நோக்குகிறோம்.

செயல்பாடுகளுக்கு ஏற்ப கீழ்கண்ட வழிமுறைகளை நிதி ஆதாரத்திற்கு முயற்சிக்கலாம்.

- ஒரு நிகழ்ச்சிக்கு ஒருவரே/ஒரு நிறுவனமே ஏற்கச் செய்யலாம் (sponsorship).
- நன்கொடை ரசீதின் மூலம் வசூல்
- நிகழ்ச்சிகளுக்கு தேவையான பொருட்களை அன்பளிப்பாகப் பெறுவது.
- கலைநிகழ்ச்சிகளின் போது உண்டியல் வசூல்.
- புத்தக விற்பனை மூலம் முகவர் கழிவுத் தொகை.
- நிகழ்ச்சிகளுக்கு குறைந்தபட்ச நுழைவுக் கட்டணங்கள்.
- மலர் வெளியீடு, விளம்பரத் தொகைகள்.
- கண்காட்சிகள் மூலம்.
- மாநிலம்/மாவட்டம் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் (project).

திரட்டப்படும் நிதி உதவிகள் முறையாக கிளைக் கூட்டங்களில் வைத்து பதிவு செய்ய வேண்டும். ஆடம்பரங்களின்றி எளிமையான முறையில் நிகழ்ச்சிகளுக்கு செலவிடப் பட வேண்டும்.